ISSN:2582-9599



# தமிழ் நாடக வரலாற்றில் இசை நாடகம்

முனைவர் வே. ராணி

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

அன்னை மகளிர் கல்லூரி, கரூர்.

27

**ஆய்வு சுருக்கம்**

தமிழ்க் குலத்தின் தலையாய கலை – தமிழ் நிலத்தின் நாடகக் கலை. இயற்கையிலே கருத்தாங்கி இயல், இசை, நாடகம் என்ற இனிமையிலே உருவவெடுத்து உயிரோட்டமாக திகழ்வது நாடகம். ஒவ்வொரு நிலைபாடுகளையும், சிக்கல்களையும் உள்ளத்து உணர்வுகளையும் நாடகத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. அக்கால நாடகத்தின் நிலைபாடுகள் பற்றியும் சுவாமிகளின் நாடக நிலை பற்றியும் இசையின் வாயிலாக அறிய முற்படுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**முன்னுரை**

தமிழ் மண்ணின் கலை இலக்கிய வரலாற்றில் பக்தி இயக்கம், விடுதலை இயக்கம், தமிழ் இயக்கம் மற்றும் சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் போன்றவை தமிழின் தொன்மக்கலைகளின் பங்களிப்பினை உள்வாங்கிய நிலையில் உருப் பெற்றுள்ளதை காணமுடிகிறது. தாய்மைக் கலையாக என்றென்றும் திகழ்வது நாடக் கலை.

**சங்க கால நிலை**

சங்க காலத்தில் பாணர், பறையர், துடியர், கடம்பர், வயிரியர், கோடியர், விறலியர் போன்றவர்கள் அனைவரும் இசைக் கருவிகளைக் கொண்டு பாடி, ஆடி கலை நிகழ்ச்சி நடத்தியவர்களாக திகழ்ந்ததை அறிய முடிகிறது. இவர்கள் அக்கால மக்களின் கலை, கலாச்சாரம் போன்ற தளங்களில் குடியிருக்கும் மக்களின் இரத்தமும் சதையும் போல வாழ்ந்து வந்தனர். அதனால் தான்,

“பாணன் பறையன் துடியன் கடம்பன்
இந்நான்கல்லது குடியுமல்ல” [1] - புறம் 335

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது. ஒரு குடிபிறப்பு என்பது இத்தகைய இசைவாணர்கள், கலைவாணர்கள் இல்லாமல் வாழ்க்கை என்பதே இல்லை என்கிறது. அழுதாலும், தொழுதாலும், சடங்குகள் செய்தாலும், செய்திப் பரிமாற்றங்கள் செய்தாலும் இக்கலைஞர்கள் இல்லாது அன்றைய காலச் சமூகம் இயங்கவில்லை. விறலியர் என்போர் பலர் இணைந்து ஆடுவோர் ஆவர். கோடியர் என்போரும் குழுவினராக ஆடுவோர் ஆவர்.

“கோடியர் நீர்மைப் போல் முறை முறை
ஆடுநாக் களியு மிவ் உலகத்து கூடிய” [2] புறம் - 29

என்ற புறப்பாடல் வழி அறியலாகின்றது.

வயிரியர் கோடியர் போல் கொம்பு வாத்தியம் கொண்டு இசைத்து ஆடுவோர் எனப்பட்டனர்.

“அல்லிக் கூத்து” [3] புறம் - 33

“குரவைக் கூத்து” [4] பதிற் - 56

"அமலைக் கூத்து" [5] அகம் -142

போன்ற பெயர்களில் குறிப்பிடப்படும் கூத்துகள் என்பவை இசையோடு பாடலும் ஆடலும் சேர்ந்த தன்மைகளை கொண்டதாகவே விளங்குகிறது.

கூத்துகள், இசை நாடகங்களான பள்ளு, குறவஞ்சி நொண்டி நாடகங்கள், கிறித்துவ போதனைகள் கொண்ட பாஸ்கா மற்றும் "வாசாப்பு" நாடகங்கள், கீர்த்தனை நாடகங்கள், தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நாடகங்கள், மதுரகவி பாஸ்கரதாஸ் நாடகங்கள், டி.கே.எஸ்.சகோதர்கள் நாடகங்கள், சபா நாடகங்கள், வீதி நாடகங்கள், தமிழ் நவீன நாடகங்கள் என அரங்கியல் துறையில் வளர்ச்சி நிலைகளை காணமுடியும். மரபின் உள்ளடக்கம் பொதிந்த பண்பாட்டுச் செல்வங்களாக நாடகங்கள் திகழ்கின்றன.

**பௌத்தம் சார்ந்த நாடக இசை**

1936-ல் தேவதாசி முறை தடுப்புச் சட்டம் கொண்டு வரும் வரை இசை, நாட்டியம், போன்ற கலை வடிவங்களைத் தேவதாசிகள் காத்து வளர்த்து வந்துள்ளனர். [6]

மாதவி ஆடிய பதினொரு ஆடல்கள் குறித்து சிலப்பதிகாரம் சுட்டுகிறது. இந்த ஆடல்கள் யாவும் நாட்டிய நாடகங்கள் ஆகும். நாட்டிய நாடகங்கள் பௌத்த காலங்களிலேயே ஆடப்பட்டு வந்துள்ளன. நாட்டிய நாடகங்களுக்கான இலக்கண நுல்களைப் பௌத்தர்கள் எழுதியுள்ளதை அறிய முடிகிறது.

கூத்துகள் பற்றி குறிப்பிடும் போது அகம், பிறம் என்று பிரித்துப் பலவகையான கூத்துகள் என நமது இலக்கியங்களும் உரையாசிரியர்களும் விளக்கியிருப்பதை அறிய முடிகிறது. ஆட்டங்களின் வளர்ச்சி, கூத்துக்களின் வளர்ச்சி, பின் இசை நாடகங்கள் பின்னர் நாடகங்கள் என வளர்ச்சி நிலை பெற்றுள்ளது.

**நாயக்கர் கால நாடக இசை**

1600-ல் நாயக்க மன்னர் காலந் தொடங்கி 1684-1712 தஞ்சையை ஆண்ட சஹாஜி மன்னர் எனும் மராட்டியர் காலத்தில் வளர்ந்து 1900 வரை குறவஞ்சி நாடகங்கள் உருப் பெற்றுள்ளன.

பள்ளு எனும் நாடகங்களும் தொடர்ந்து நொண்டி நாடகங்களும் கி.பி.17, 18 நுற்றாண்டுகளில் தமிழகத்தை, ஆண்டுள்ள சிற்றரசர்களின் ஆதரவில் இசை நாடகங்கள் என நிகழ்த்தப்பட்டுள்ளன.

"கண்ணி கொண்டுவாடா! பண்ணவர் குற்றவர்
கார் ஆர் திரி கூடச் சாரலிலே வந்த
பண்ணிய புண்ணியம் எய்தினால்
பறவைகள் எல்லாம் பரந்து ஏறிமேயுது"7

திருக்குற்றாலக் குறவஞ்சி-20

என்ற அடிகளால் அறியலாகின்றது.

குறவஞ்சி நாடகம், குறவஞ்சிக்கு முன்னர் எழுந்த பள்ளு நாடகம், குறவஞ்சிக்குப் பின்னர் எழுந்த நொண்டி நாடகம் ஆகிய இவையே தமிழ்மொழியில் முதன்மலாகக் கிடைக்கப் பெறும் நாடக நூல்களாகக் காணப்படுகின்றன.

பள்ளு, குறம், நொண்டி நாடகம் பின்னர் வந்துள்ள கீர்த்தனை நாடங்கள் யாவும் உழைக்கும் மக்களின் இசை நடைகளை உள்வாங்கிய நிலையில் மக்களிடம் செல்வாக்கு பெற்றுள்ளன.

செவ்வியல் இசையுடன் பாமர மக்களின் இசை வகைகளும் சொல் நடைகளும் பயின்று வந்துள்ளமையினை உணர முடிகின்றது.

**கிறித்துவர்களின் நாடக குழு**

தமிழகத்தில் கிறித்துவ மதம் பரப்ப வந்த இந்நாடகம், தமிழ்க்கலை, பண்பாடு, சமயச் சடங்குகள் ஆகியவற்றின் ஆளுமை பெற்றதோடு மட்டுமல்லாமல், மேடை அமைப்பு, சாட்சி அமைப்பு, ஒப்பனை, மேடையாக்கம் இவற்றில் ஊருக்கு ஊர் வேறுபட்டு இன்றும் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

வாசாப்பு நாடகம் என்று சொல்லத்தக்க ஒருவகை கிறித்துவ நாடக வடிவத்தினைத் தொடக்க காலங்களில் கிறித்துவர்கள் நடித்தனர். திருச்சி போன்ற நகரப் பகுதிகளில் இவ்வகை நாடகம் நிகழ்ந்துள்ளது.

பைபிளில் எழுதப்பட்டுள்ள வாசகங்களை மாறிமாறிப் பலரும் வாசிக்க அவ்வாசிப்பிற்கேற்ப உடை, ஒப்பனை அணிந்து பாத்திரங்கள் வசனங்கள் பேசாது வாயசைத்து நாடகம் நடித்துள்ளனர்.

இந்த வாசாப்பு நாடகம் மக்களிடையே பெரிய செல்வாக்கினைப் பெறாமல் போனதால் பாஸ்கா நாடகங்கள் நடந்தேறியுள்ளன. இசை, பாடல் எனும் இசை நாடக வகையைத் தொட்டு நாடகங்கள் செய்ததன் பயனாய் இன்றளவும் பாஸ்கா நாடகங்கள் மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ளன.

**சங்கரதாஸ் சுவாமிகள்**

1867 திங்கள் 7-ல் பிறந்தவர் சங்கரதாஸ் சுவாமிகள். 1891-ல் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் தமிழ் நாடக உலகிற்கு வந்தார். 1910-ல் 'சமரச சன்மார்க் நாடக சபை' எனும் தனது சொந்த நாடக மன்றத்தை தொடங்கினார். 1916-ல் பாலர் நாடக சபை உருவானது.

நாவில் வந்ததைப் பாடுவோம்
நாடகம் தினம் ஆடுவோம்
நாங்கள் சிறுவர் எங்கள் பிழையை
நீங்கள் பொறுப்பீர் நாளுமே

எனச் சுவாமிகள் எழுதிய பாடல் நடிகர்கள் அனைவருக்கும் பாடமாக திகழ்ந்தது.

இசை நாடகம் பாமர மக்களிடமும் பட்டி தொட்டி எங்கும் பரவிட சுவாமிகள் தாம் எழுதி இசையமைத்து இயக்கி மேடை நிர்வாகம் செய்து ஒரு இயக்கமாக செயல்பட்டதை அறிய முடிகிறது

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் வரவு தமிழ் இசை நாடக உலகிற்கு முக்கியத்துவம் அளித்தது. கோவலன் கண்ணகி நாடகத்தில்,

காசைப் பறிக்கும் ஐரோப்பா
கவர் மெண்டைப போலக்
கைப் பொருள் தனைப் பறித்தாள்

என மாதவியைப் பற்றிக் கோவலன் பாடும் பாடலடிகளாக உடுமலை நாராயண கவி மதுரை நாடக சபாவில் இருந்த காலத்தில் எழுதியுள்ளார்.

சுவாமிகளது நாடகப் பிரதிகளைப் பலரும் விடுதலை உணர்வுக்கான பாடல்கள் வசனங்கள் சேர்த்து இன்னொரு தளத்திற்கு எடுத்துச் சென்றதில் முதன்மையாக இடம் பெற்றவர் மதுரகவி பாஸ்தரதாஸ்.

தனிப்பட்ட உரை வீச்சுச் சொற்களால் வெளிப்படுத்த முடியாத ஆழ்மன உணர்ச்சிகளை இசையாலும் கவித்துவம் மிளிர்ந்தெழும் பாடல்களாலும் மட்டுமே உயிர்தெழச் செய்ய முடியுமாதலால்

சுதந்திரப் போராட்டத்தைச் சித்தரிக்கும் தன் பாடல்களில் இசையோடு லயமுற்ற சொற்களை பாஸ்கரதாஸ் பிரயோகித்து சொல்லிசையைத் தழையச் செய்ததை அறிய முடிகின்றது.

1892-1952 காலகட்டம் மதுரகவி பாஸ்கரதாஸ் அவர்கள் இயற்றிய நாடகங்கள் கோசிக குமாரி மணம், தேசபக்தி எனும் பாணபுரத்து வீரன் போன்ற ஒருசில நாடகங்களை எழுதியிரந்தாலும் எண்ணிறைந்த நாடகங்களுக்குப் பாடல்கள் எழுதிக் கொடுத்த வல்லவராகத் திகழ்ந்தார்.

“ஒரு தளத்தில் ஒரு நடிகனின் உடல் இயங்கும்போது அந்நடிகனின் மெய்ப்பாடுகள் மூலமாக கருத்துப் பரிமாற்றத்தைச் சத்தியோட்டமுள்ளதாக மாற்ற இயலும். ஒரு சாட்சியின் இன்றியமையாத நிகழ்வை உடற்கூறுகளால் ஆக்கப்படும் வடிவங்களின் மூலம் உருவகப்படுத்திச் செறிவோடு புலப்படுத்த முடியும். நடிகனின் உடல் என்பது பல இயந்திரங்கள் அடங்கிய ஓர் உன்னதமான இயந்திரமாகும்.“ 8

**இன்றைய கால கட்டம்**

நாடகம் என்பது நாட்டிலும் வீட்டிலும் நடப்பதன் வெளிப்பாடு எனவும், அகம் நாடுவது எனவும், போலச் செய்தல் எனவும், பொருள் கொண்டு நாடகத்தின் தன்மையை உணர முடிகிறது. நாடகம் கலைகளுக்கெல்லாம் அரசு. இதனைக் கலைக்கரசு என்பார் அவ்வை திரு. தி.க.சண்முகம்.

1. உள்ளத்தின் செயல்பாடு – இயல்
2. உணர்வின் செயல்பாடு – இசை
3. உடலின் செயல்பாடு – நாடகம்

இன்று நாடகத் தமிழ் பல்வேறு இடங்களில் செல்வாக்கு பெற்று விளக்குகிறது. நாடக கலைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக விழிப்புணர்வும், பரிசு தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

- ஆதிகால மனிதனிடம் உயிர் பெற்றக்கலை
- இன்றைய கால மனிதனிடம் உயர்வு பெறுகின்ற கலை
- எதிர்கால மனிதனை உருவாக்கும் கலை

எல்லாக் கலைகளையும் உள்ளடக்கும் தாய்மைக் கலையாக விளங்குகிறது. இன்றும் பல நாடக ஆசிரியர்கள் உருவாகி இன்றைய காலகட்டத்திறகு ஏற்ப வசனங்களை மக்கள் மனதில் பதியச் செய்வதையும் காண முடிகிறது.

**முடியுரை**

பட்டித் தொட்டிகளிலெல்லாம் பாமர மக்களுக்குப் பரவசம் தந்து பயன்பட்டதும் – பயன்பட்டுக் கொண்டு இருப்பதுமான கூத்துக்கலை தான். இன்று இலக்கிய அந்தஸ்து ஏற்று நாடகக் கலையாக எழில் வடிவம் தாங்கியிருக்கிறது.

நாடக உலகின் ஜீவசக்தியை எடுத்துக் கொண்டுதான் அன்று தமிழ்த் திரையுலகம் இளமை முறுக்கேறி ஏறு நடை போடத் தொடங்கி இன்று வரையும் அந்த வீறு நடையோடு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

நாடக ஆசிரியனை நாடிப்போற்ற வேண்டும்.
நாடுவாழ கேடு வீழ பாடுபடும் பாட்டாளி அவன்.

**அடிக்குறிப்பு**

1. புறநானூறு – 335
2. புறநானூறு – 29
3. புறநானூறு – 33
4. பதிற்றுப்பத்து – 56
5. அகநானூறு – 142
6. இசை நாடக மரபு - 120
7. திருக்குற்றாலக் குறவஞ்சி - 20
8. நாடகப் படைப்பாக்கம் அடித்தளங்கள் - 127

**துணை நூற் பட்டியல்**

1. நாடகப் பணி கட்டுரைக் கனிகள்
நாடகப் பணி, அருணகிரி
புத்தக பதிப்பாளர்
சீனிவாச பெருமாள் சந்தி முதல் தெரு
சென்னை – 600 014.

2. தமிழ் நாடகம் தோற்றம் வளர்ச்சி
டாக்டர் ஆறு. அழகப்பன்
பாரி நிலையம்
90 பிராட்வே
சென்னை – 600 108.

3. நாடகப் படைப்பாக்கம் அடித்தளங்கள்
சே. இராமானுஜம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

4. இசை நாடக மரபு
கே.ஏ. குணசேகரன்
NCBH - 2004
சென்னை.

5. சங்கரதாஸ் சுவாமிகள்
சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம்
மீனாட்சி கலா நிலையம்
இராயப்பேட்டை
சென்னை – 14.